

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் அணிச் செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில், அத்திவாக்கம் சுன்னத் ஜமாஅத் ஜாமியா மஸ்ஜித், பள்ளிப்பேட்டை மஸ்ஜிதே முகமது இப்ராஹிம் பள்ளிவாசல், மஸ்ஜிதே வாலாஜா ஜாமிஆ மஸ்ஜித் சுன்னத் ஜமாஅத் – கடப்பேரி பள்ளிவாசல், டவுன் ஜாமிஆ மஸ்ஜித், மஸ்ஜித் வாலாஜா – கடப்பேரி, நவாப் ஜாமிஆ மஸ்ஜித்– கருங்குழி, ஜாமிஆ மஸ்ஜித் – படாளம், ஜாமிஆ மஸ்ஜித்–சூனாம்பேடு முதலிய பள்ளிவாசல் நிர்வாகிகளை சந்தித்து கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு ஆதரவாக வாக்குகளை சேகரித்தனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.கழகத்துக்கு உட்பட்ட மயிலாப்பூர் மேற்கு பகுதி – 121 'அ' வட்டக் கழகச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார். ராயப்பேட்டையில் உள்ள அவரது இல்லம் சென்று கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திருவுடலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள். அவருடைய குடும்பத்தார் – நண்பர்கள் – கழக உடன்பிறப்புகளுக்கு ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்தார்கள்.

தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் முன்னிலையில் – இன்று

மதுராந்தகத்தில் மேயர் பிரியா - ஸ்ரீலேகா - ஜோதி - ரோஜா பிரச்சாரம்!

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



ரோஜா

சென்னை,செப்.29- காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்கள் தா.மோ. அன்பரசன், க. சுந்தர் முன்னிலையில்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்களை ஆதரித்து அண்டவாக்கம், புதுப்பட்டு, மேல்மா ஊராட்சிக ளுக்குட்பட்ட 3 பாகங்களில் மேயர் பிரியா ராஜன் மற்றும் இளம் பேச்சாளர்கள் ஸ்ரீலேகா, ஜோதி, ரோஜா ஆகியோர் தொடர் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர் என சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம். எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அண்டவாக்கம், புதுப்பட்டு, மேல்மா ஆகிய ஊராட்சிக ளுக்கு உட்பட்ட 37, 38, 57 ஆகிய 3 பாகங்களில் உள்ள வாக்காளர்களை ஒருங்கிணைத்து வாக்கு சேகரிக்கும் வகையில் மேயர் பிரியா ராஜன் மற்றும் இளம் பேச்சாளர்கள் ஸ்ரீலேகா, ஜோதி, ரோஜா ஆகியோரைக் கொண்டு தொடர் பிரச்சாரக் கூட்டங்கள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க. சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றியச் செயலாளர் சத்யசாய் நாதன், துணைச் செயலாளர் திருஞான செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகின்றன.

29.09.2026 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி

அண்டவாக்கம் ஊராட்சி - பாகம் எண் 38

பொறுப்பாளர்கள்: மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள்.

38வது பாக உள்ளூர் பொறுப்பாளர்கள்: மணி பால், நாகப்பன், ஏகதாஸ், நவீன்குமார், முனியம்மாள், தில்சாத், ராஜகுமாரி, அஸ்வினி, யுவராணி.

29.09.2026 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி

அண்டவாக்கம் ஊராட்சி - பாகம் எண் 57

பொறுப்பாளர்கள்: வில்லிவாக்கம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்.

57வது பாக உள்ளூர் பொறுப்பாளர்கள்: ஜெயபால், விஜயகுமார், உதயகுமார், ராஜேந்திரன், ஆர். வாசுதேவன்.

29.09.2026 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

மேல்மா ஊராட்சி - பாகம் எண் 37

பொறுப்பாளர்கள்: எழும்பூர் வடக்கு மற்றும் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்.

37வது பாகப் பொறுப்பாளர்கள்: சி. சுந்தரவரதன், பிரதாப், மதன் பால், நாகராஜன், நாகப்பன்.

மேற்கண்ட பிரச்சாரக் கூட்டங்களில் சென்னை கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வில்லிவாக்கம் கிழக்கு-மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள், எழும்பூர் வடக்கு-தெற்கு பகுதிக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், 37, 38, 57 ஆகிய பாகங்களின் உள்ளூர் பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

மேலும், சம்பந்தப்பட்ட பாகங்களைச் சேர்ந்த வாக்காளர்களைப் பெருந்திரளாகப் பங்கேற்கச் செய்து, இளம் பேச்சாளர்கள் மேற்கொள்ளும் இத்தொடர் பிரச்சாரத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில், திமுக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து, சென்னை வடக்கு மாவட்ட செயலாளர். ஆர். டி. சேகர் ஆலோசனையின்படி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் இராயபுரம் சு.சேகர், கட்பீஸ் ப. சோமசுந்தரமூர்த்தி, வெ. சு. சத்யநாராயணன், அப்துல்மாலிக், முன்னாள் மாவட்ட திமுக மீனவர் அணி துணைஅமைப்பாளர். கு. தினேஷ்குமார், கே. தாமோதரன் டி. தேசப்பன், ஜான்பாட்சா, சுரேஷ் ஆகியோர் வீடு வீடாக சென்று உதயசூரியனுக்கு வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியின் சின்னத்தில் வாக்குகள் கேட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி ஆலோசனைப்படி மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் – வையாவூர் ஊராட்சி – கொளம்பக்கம் பூத்து எண் 70 க்கு உட்பட்ட பகுதிகளில் மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் மருத்துவர் R. அண்ணாமலை ரகுபதி வீடு வீடாக சென்று தீவிர பிரச்சாரம் மேற்கொண்ட பொழுது எடுத்த படம். உடன் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு கே பி கே டி தங்கமணி அவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கல்லறைகள் மீது பொதுப்பணித்துறையினர் நோட்டீஸ் ஒட்டிய அவலம்;

நத்தம்பேடு ஏரிக்கரை சரிவிலுள்ள சுடுகாடு, கல்லறைகள், எரிமேடை திடீரென அகற்றம்:

பொதுமக்கள் அவதி :





திருவள்ளூர், செப்.29- திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் வட்டத்திற்கு உட்பட்ட நத்தம்பேடு ஏரிக்கரை சரிவில் உள்ள சுடுகாடு, கல்லறைகள், எரிமேடை ஆகியவற்றை பொதுப்பணித்துறையினர் திடீரென அகற்றியதால் பொதுமக்கள் பெரும் துயரத்துக்கு உள்ளாகி உள்ளனர். திருநின்றவூர் அருகே உள்ளது நத்தம்பேடு ஊராட்சி. நத்தம் பேடு இரண்டாவது வார்டை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மூன்று தலை முறையாக ஏரிக்கரை சரிவில் இருந்த சுடுகாடு, எரிமேடை ஆகியவற்றை பயன்படுத்தி வந்தனர்.20 ஆண்டுகளாக அந்த சுடுகாட்டில் இறந்தவர் களுக்காக கல்லறை கட்டி உள்ளனர்.

இறந்தவர்கள் நினைவு நாளில் அங்கு சென்று வழி பாடு செய்து வந்தனர். சிலர் எரிமேடையை பயன்படுத்தி வந்தனர்.இந்நிலையில், இறந்தவர்களின் சமாதியை அகற்றியதுடன், சுடுகாட்டால் நீர்நிலை மாசடைந்து வருகிறது என திருவள்ளூர் மாவட்ட பொதுப்பணித் துறை அதிகாரிகள், சுடுகாடு அகற்றப்படும் என கல்லறைகள் மீது நோட்டீஸ் ஒட்டி உள்ளனர்.கல்லறைகள் மீது நோட்டீஸ் ஒட்டினால் பொதுமக்களுக்கு எப்படி விழிப்புணர்வு ஏற்படும் என்பதை கூட சிந்திக்காத அதிகாரிகள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.கல்லறைகள் மீது நோட்டீஸ் ஒட்டிய தற்கு பதிலாக கிராமத்தில் வருவாய் துறை மூலம் அறிவிப்பு செய்திருக்கலாம் என பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளர் உஷா தலைமையில் ஜேசிபி இயந்திரங்கள் வைத்து அனைத்து கல்லறைகளையும் இடித்து நொறுக்கி சுக்குநூறாக்கி உள்ளனர்.இதனால் பொதுமக்கள் மனம் உடைந்து போய் உள்ளனர்.அதேபோன்று எரிமேடையையும் அப்புறப்படுத்தியுள்ளனர். இது பற்றி தெரிந்ததும் அதிகாரிகளை முற்றுகையிட்டு அப்பகுதி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுடுகாட்டை அப்புறப்படுத்தியதால் எங்கள் கிராமத்தில் எவரேனும் இறந்தால் எங்கு கொண்டு போய் புதைப்பது, எரிப்பது, கல்லறை கட்டுவது என பொதுமக்கள் திக்குமுக்காடி அதிகாரிகளிடம் கேள்விகளை எழுப்பி உள்ளனர். இதற்கு அதிகாரிகள் சரியான பதில் அளிக்காமல் அங்கிருந்து புறப்பட்டு சென்று விட்டனர். சர்வே எண் 850/1 நத்தம்பேடு ஏரி நீர் நிலையில் அண்ணா நகர் கிழக்கு, மேற்கு, 26 வேப்பம்பட்டு ஆகிய மூன்று சுடுகாடுகள் அமைந்துள்ளன. இவற்றால் ஏற்படாத மாசு, ஏரிக்கரை சரிவில் உள்ள ஆதிதிராவிடர் சுடுகாட்டை அப்புறப்படுத்தியது கண்டனத்துக்குரியது அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியின் சின்னத்தில் வாக்குகள் கேட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி ஆலோசனைப்படி மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் – வையாவூர் ஊராட்சி – கொளம்பக்கம் பூத்து எண் 70 க்கு உட்பட்ட பகுதிகளில் மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் மருத்துவர் R. அண்ணாமலை ரகுபதி வீடு வீடாக சென்று தீவிர பிரச்சாரம் மேற்கொண்ட பொழுது எடுத்த படம். உடன் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு கே பி கே டி தங்கமணி அவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மதுராந்தகம் தொகுதியில் இ.பரந்தாமனை ஆதரித்து

கழக இலக்கிய அணியினர் தீவிரப் பிரச்சாரம்!

நந்தனம் நம்பிராஜன் தலைமையில் வாக்கு சேகரிப்பு!

மதுராந்தகம், செப்.29- மதுராந்தகம் தொகுதியில் இ.பரந்தாமனை ஆதரித்து தி.மு.க. தலைமை இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் நம்பிராஜன் தலைமையில் மதுராந்தகம் இடைத்தேர்தலில் வாக்கு சேகரிப்பு பணி நடைபெற்றது.

மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமனை ஆதரித்து திமுக தலைமை இலக்கிய அணி சார்பில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர் டிவி கோகுலக்கண்ணன் ஆகியோரின் ஆலோசனைப்படி அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியம் மோகல்வாடி ஊராட்சி பாகம் எண் 156 மற்றும் எலப்பாக்கம் ஊராட்சியில் வீடு வீடாகச் சென்று மாநில இணை செயலாளர் நந்தனம் நம்பிராஜன் தலைமையில் துண்டு பிரசுரம் வழங்கி வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் கலியுக கண்ணன், ஒன்றிய நிர்வாகி முகமது அலி, சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் சரண்முகநாதன், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கொரஞ்சூர் எஸ்.முனுசாமி, கிளை கழக செயலாளர்கள் கே.ராமச்சந்திரன், அழகேசன், முரளி, ஜெயசீலன், இளைஞர் அணி பாபு, சதீஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த வாக்கு சேகரிக்கும் பணியில் மகளிர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி போட்டியிடும் கழக வேட்பாளர் ஐ. பரந்தாமனை ஆதரித்து தேர்தல் பணிமனை திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கருங்குழி பேரூர் 63 பாகம் பகுதியில் முன்னாள் அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு அப்பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் ஆதிதிராவிடர் நலக்குழு அணிச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த், கருங்குழி பேரூர் கழகச் செயலாளர் சுந்தரமூர்த்தி, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் ஷாஜகான் உள்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தி.மு.க. தலைமை இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் நம்பிராஜன் தலைமையில் மதுராந்தகம் இடைத்தேர்தலில் வாக்கு சேகரிப்பு பணி நடைபெற்றது. மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமனை ஆதரித்து திமுக தலைமை இலக்கிய அணி சார்பில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் கா. சுந்தர் ஆலோசனைப்படி அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியம் மோகல்வாடி ஊராட்சி பாகம் எண் 156 மற்றும் எலப்பாக்கம் ஊராட்சியில் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கும் பணியில் மகளிர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஐ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, வேண்டுகோளுக்கிணங்க பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை, கோசு மணி, கோடம்பாக்கம் மு.சத்தியா ஆகியோர் முன்னிலையில் வீராலூர் வார்டு 1 நாகமலை பகுதியில் 132 வது வட்டக் கழக செயலாளர் ந.மோ.முரளி தலைமையில் பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தனர். உடன் த.ராஜசேகர், சுந்தர், பிளிப், எஸ்.கே.கருணாகரன் உள்ளிட்டோர் உள்ளனர்.